This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# நிலா நிழல்

அதிகாலை முகுந்தன் கனவு கண்டான். மொத்தம் ஒரு ஓவர்தான் பாக்கியிருக்கிறது. எடுக்கவேண்டிய ரன்களோ பதினெட்டு. விக்கெட்டு ஒன்பது விழுந்துவிட்டது. கடைசி ஓவர் போடப் போவது யார் என்று அவர்கள் யோசிக்கிறார்கள். திடீர் என்று பெவிலியனுக்குச் செய்தி போய் இம்ரான்கான் வருகிறான். எப்படி வாளாடி டீமில் இம்ரான்கான் வரமுடியும் என்று காப்டனைக் கேட்கிறான். அதற்கு அவன் அப்படித் தான் அது இப்போது புதுசா ரூல் கொண்டு வந்திருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் கடைசி ஓவரில் போடலாம் என்று வந்திருக்கிறது என்கிறான்.

முகுந்தனைச் சுற்றிலும் வியூகம் அமைத்தாற் போல பீல்டர்களைக் காப்டன் ரொம்ப நிதானமாக ஒவ்வொருத்தனாக நிறுத்தி வைக்கிறான். முகுந்தன் எல்லா பக்கங்களிலும் பார்க்கிறான். பைன் – லெக் பகுதியில் மட்டும் இடைவெளி இருந்தது.

இம்ரான் ஓடி வந்து முதல் பால் போட, அதை ஒரு வீசு வீசுவதற்குள் விக்கெட் கீப்பரின் கையில் பந்து சரணடைந்து விட, அடுத்த பாலையும் அடிக்க முடியவில்லை. அடுத்த பாலும் அவ்வண்ணமே.

மூன்றே பந்துகள்! பதினெட்டு ரன்கள் எடுத்தாக வேண்டும்.

இம்ரான் இன்னும் ஸ்டெப் எடுத்துக் கொண்டு இன்னும் ஆக்ரோஷமாக ஓடி வருகிறான். முகுந்தன் சீரங்கத்துப் பெருமாளையும் திருவானைக்காவல் ஜம்பு, மலைக்கோட்டை, உச்சிப் பிள்ளையார் எல்லோரையும் வேண்டிக் கொண்டு ஒரே வீச்சு வீசுகிறான். பந்து பிய்த்துக் கொண்டு மிடான் பக்கம் ஸிக்ஸர்.

அடுத்த பந்து மூன்றாவது ஸ்லிப்பில் ஸிக்ஸர் போகிறது. இப்போது மைதானமே அமைதியில் மூழ்கியிருக்க, மாட்சின்கட்டக் கடைசிப் பந்து. புள்ளிபோல் மைதானத்தின் மேற்கு மூலையிலிருந்து இம்ரான் ஓடிவர, எங்கிருந்தோ கமெண்ட்ரி கூடக் கேட்கிறது. ஹியர் கம்ஸ் இம்ரான் டூ முகுந்த். இஸ் ஹி கோயிங் டு டு இட்? இஸ் ஹி?

“எந்திரி முகுந்து”

கண் விழித்தால் வேலைக்காரி முத்தமா கையில் தென்ன விளக்குமாறு ப்ளாஸ்டிக் பக்கெட்டுமாகக் காவிச் சிரிப்புடன் “எந்திரி, எத்தினி நேரம்தான் தூங்குவே? வேட்டிய சரியா கட்டிக்க.”

கோபத்துடன் “சே, கெடுத்துட்ட முத்தம்மா, அந்த ஸிக்ஸர் அடிச்சனா இல்லையா? அதுக்குள்ள எழுப்பிட்ட நீ”

“காலேசு கிடையாதா?”